"கால்நடை வளர்ப்பு பற்றிய 22- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.95,31,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-4-1995) காலை 10.00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

103. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 16-8-1994-ஆம் நாளிட்ட 139-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

104. 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி (இடவசதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 14-7-1994-ஆம் நாளிட்ட 564-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].